# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 223/ந/2017

ஆணை எண். 296/2017

நாள் : 26/12/2017

திருமதி R. விஜயா,
சின்ன திருப்பதி,
சேலம் – 8 — **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
குமாரபாளையம் நகராட்சி,
குமாரபாளையம். — **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், சின்ன திருப்பதி மீனாட்சி நகர், எண்.9–A சுப்பராயன் லேன் முகவரியைச் சேர்ந்த திருமதி R. விஜயா அவர்களின் 16.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 17.11.2017 அன்று பெறப்பட்டு, 223/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து குமாரபாளையம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், சின்ன திருப்பதி மீனாட்சி நகர், எண்.9–A சுப்பராயன் லேன் முகவரியைச் சேர்ந்த திருமதி R. விஜயா என்பவர் காலம் சென்ற தனது கணவர் திரு K.ராஜதுரை அவர்களது ஓய்வூதியப் பலன்கள் மற்றும் பிற பலன்களை உடனடியாக வழங்க ஆணையிடக்கோரி இம் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரரது முறையீடு மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் நிகழ்வுகள் பற்றிய விவரங்கள் தேதிவாரியாக குறிப்பிடப்பட்டுள்ளன :-

(1) முறையீட்டு மனுதாரரின் கணவர் பணிக்குத் தவறாமல் 26.11.2015 வரத்தவறியதற்காக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி நீக்கம் செய்து ஆணையிடப்பட்டநாள் ;

| | | |
|---|---|---|
| (2) | பணிநீக்கத்தை எதிர்த்து திரு K. இராஜதுரை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு மேல்முறையீடு செய்த நாள் ; | 12.12.2015 |
| (3) | மனுதாரரின் கணவர் திரு K. இராஜதுரையின் பணி மூப்பு நாள் ; | 31.12.2015 |
| (4) | நகராட்சிப் பணியாளர் திரு K. இராஜதுரை காலமான நாள்; | 12.05.2016 |
| (5) | பணி நீக்கம் செய்யப்பட்ட திரு K. இராஜதுரையின் மேல்முறையீட்டு மனு மீது இறுதி ஆணை வழங்கப்பட்ட நாள்; | 28.03.2017 |
| (6) | பணியாளர் 12.05.2016–இல் காலமான பின்பு மேல்முறையீட்டு மனு மீதான ஆணையினைத் தொடர்ந்து பணியிலிருந்து ஒய்வு பெற அனுமதித்து ஆணையிடப்பட்ட நாள் ; | 26.10.2017 |
| (7) | மனுதாரரின் ஓய்வூதியப் பலன்கள் வழங்கக் கோரி இம் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்த நாள் ; | 16.11.2017 |
| (8) | மனுதாரரின் ஓய்வூதியப் பலன்கள் வழங்கக் கோரும் மனு மீதான கருத்துரு உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு அனுப்பப்பட்ட நாள் ; | 06.12.2017 |

3. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரரது கணவர் திரு K. இராஜதுரை 31.12.2015 அன்று வயது மூப்பின் காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற இருந்த நிலையில் 26.11.2015 அன்று பணியிலிருந்து பணி நீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. 12.12.2015 அன்று சமர்ப்பித்த திரு K. இராஜதுரையின் மேல்முறையீட்டு மனு மீது, அவர் காலமான 12.05.2016 வரை எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப்படாமல் நிலுவையில் இருந்துள்ளது. பணியாளரின் இறப்பிற்கு முன்பே மேல்முறையீட்டு மனு மீது உரிய ஆணை பிறப்பிக்கப்படாமல், சுமார் 15 மாதங்கள் கடந்த பின்பே, அதாவது அவரது இறப்பிற்குப் பின்பும் 10 மாதங்கள் கடந்த பின்பே பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடித்து வைத்து (Abating) நகராட்சி நிர்வாக ஆணையரால் ஆணையிடப்பட்டுள்ளது. பின்பு சுமார் 7 மாதங்கள் கடந்த பின்பே 26.10.2017 அன்று பணியாளர் 31.12.2015–இல் ஓய்வு பெற்று விட்டதாகப் பதிவு செய்து நகராட்சி ஆணையர் ஆணையிட்டுள்ளார்.

4. இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரரின் கணவர் காலம் சென்ற திரு K. இராஜதுரை அவர்கள் மீது நகராட்சி மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கை, பணி நீக்கம் செய்து வெளியிடப்பட்ட ஆணை, மேல் முறையீட்டு மனுவினை தீர்வு செய்வதில் கணிசமான காலதாமதம் ஏற்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர் திரு K. இராஜதுரை மீதான ஒழுங்கு நடவடிக்கையில் முடிவான ஆணை 28.03.2017 அன்றே பிறப்பிக்கப்பட்டும் அவரது ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட கருத்துரு 06.12.2017 அன்று தான் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் கணவனை இழந்த 56 அகவையிதனைக் கடந்த குடும்பத் தலைவி இவரது கணவர் சம்பந்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்த இறுதி ஆணை பெற்றவுடன், ஓய்வூதியக் கருத்துரு விரைவு படுத்தப்பட்டிருப்பின் மனுதாரர் ஓய்வூதியப் பலன்களைப் பெற்றிருப்பார். இந்நேர்வு போன்ற நேர்வுகளை பணியில் உள்ள நகராட்சி அலுவலர்கள் தனிக்கவனம் செலுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக பலன்கள்

கிடைக்கச் செய்யவேண்டும் என்பதே இம்முறைமன்ற நடுவத்தின் விருப்பம். எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக ஒய்வூதியப் பலன்கள் மனுதாரருக்கு கிடைத்திட வழிவகை செய்யவேண்டும் என வலியுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26– ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திருமதி R. விஜயா,
எண்.9 ஏ, சுப்பராயன் லேன்,
மீனாட்சி நகர், /
1/2, காமராஜர் நகர், 2–வது தெரு,
சின்ன திருப்பதி, சேலம் – 636 008.

2. நகராட்சி ஆணையர்,
குமாரபாளையம் நகராட்சி,
குமாரபாளையம்,
நாமக்கல் மாவட்டம் – 638 183.

3. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகம்,
4–வது தளம், சைதாப்பேட்டை – 600 035.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்